මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/102** **2024.09.20**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

## தேர்தல் முடிவுகளின் ஒளிபரப்பு உரிமையை வழங்குதல்

**01. உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை வெளியிடுதல்**

2024 சனாதிபதித் தேர்தலின் அத்தாட்சிப்படுத்திய உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளின் ஒளிபரப்பிற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும். உரிய கொடுப்பனவுகளைச் செலுத்தி பதிவுசெய்து கொள்ளும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரம் அத்தாட்சிப்படுத்திய முடிவுகளை பாதுகாப்பான கணினி வலையமைப்பொன்றின் ஊடாக உடனுக்குடன் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது தேர்தல் முடிவுகளின் ஒளிபரப்பு உரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள ஊடக நிறுவனங்களின் பட்டியலொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**02. உத்தியோகபூர்வமற்ற தேர்தல் முடிவுகளை (Unofficial Election Results) ஒளிபரப்புதல்**

கடந்த தேர்தல்களின்போது சில ஊடக நிறுவனங்களின் பிராந்திய பிரதிநிதிகள் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் பெற்றுக் கொண்ட முடிவுகளை ஒளிபரப்பியதன் மூலம் தேர்தல் முடிவுகள் மீதான மக்களின் நம்பிக்கை சீர்குலைந்ததை அவதானிக்க முடிந்தது. ஆகையால், அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் (தொலைக்காட்சி, செய்மதித் தொலைக்காட்சி, வானொலி, இணைய செய்தித்தாள்கள், வேறு இணையத்தளங்கள், முகநூல் (Facebook), You Tube, கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் சேவைகள் மற்றும் வேறு சமூக ஊடக வலையமைப்புகள் உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை ஒளிபரப்புவதை முற்றிலும் தவிர்ந்து கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றது.

**03. முடிவுகளை ஒளிபரப்பும் உரிமைக்காக பதிவுசெய்து கொள்ளாத இலத்திரனியல் ஊடகங்கள்**

தேர்தல் முடிவுகளின் ஒளிபரப்பு உரிமைக்காக தேர்தல் ஆணைக்குழுவில் முறையாக பதிவுசெய்யாத அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் முடிவுகளை உடனுக்குடன் பிரச்சாரம் செய்வதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். தேர்தல் ஆணைக்குழு அவ்வாறு செய்யும் ஊடக நிறுவனங்கள் பற்றி விழிப்புடன் இருப்பதுடன், அதற்கு அவசியமான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

<u>கவனிக்க:</u>

எவ்வாறாயினும், அவ்வாறான ஊடக நிறுவனங்களுக்கு சலுகையொன்றாக 22 தேர்தல் மாவட்டங்களின் அந்தந்த வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையுடன்கூடிய மாவட்ட இறுதி முடிவுகள் (22), சனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவு முதலியவற்றை ஒளிபரப்பு செய்வதற்கு அவர்களுக்கு தடையேதும் இல்லை என்பதுடன், <u>மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் செய்தி ஒளிபரப்பொன்றாக முடிவுகளை சாராம்சப்படுத்தி தெரிவிப்பதற்கு, மக்களின் தேவையொன்றாகக் கருதி வாய்ப்பளிக்கப்படலாம்.</u>

**04. அனைத்து அச்சு ஊடக நிறுவனங்கள் (செய்தித்தாள்கள்)**

அச்சு ஊடகங்களுக்கு முடிவுகளை வழங்குவதற்கான ஒரு கட்டணம் அறவிடப்பட மாட்டாது என்பதுடன், அதற்கு அவசியமான வசதிகள் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும். அதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும் அத்தாட்சிப்படுத்திய முடிவு ஆவணங்களின் ஸ்கான் செய்த பிரதிகளையும் (Scanned copy) அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு வழங்க தேர்தல் ஆணைக்குழுவினால் அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், செய்தித்தாள்களின் இணையத்தளங்களில் மேற்கொள்ளப்படும் முடிவுகளின் ஒளிபரப்பு உரிமை உரிய முறையில் பெற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் அத்தகைய இணையத்தளங்கள் மேற்கூறிய பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி செயலாற்ற வேண்டும்.

**05. வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள்**

வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் இலங்கைக்கான பிரதிநிதிகளுக்கும் அத்தாட்சிப்படுத்திய முடிவுகளை வழங்குவதற்கு அவசியமான வசதிகளை வழங்குமாறு அறிவித்து அரசாங்கத் தகவல் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

06. சனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்கும் பணி தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அலுவலர்களின் நிருவாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் சைபர் பாதுகாப்புக்கான தேசிய நிலையம் (SLCERT), கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலை (UCSC), தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NSBM) ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் அறிவுறுத்தல்களும் ஒத்தாசையும் இதற்காக பெறப்பட்டுள்ளது.

மிக முக்கியம்:

07. இந்த ஊடக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒளிபரப்பு உரிமைக்காக பதிவு செய்துகொள்ளும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்காக இருப்பினும் முடிவுகளின் கணினி வலையமைப்புகள் மூலம் வழங்கும் இறுதி முடிவு, தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதாகும்.

08. ஒவ்வோர் உத்தியோகபூர்வ முடிவையும் உரிய முறையிலும் சரியாகவும் துரிதமாகவும் பொது மக்களுக்கு வழங்குவதற்காக முன்பு குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு அமைய செயலாற்ற வேண்டுமென அனைத்து ஊடக நிறுவனங்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**

தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)